1981 ஆகஸ்டு 28]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

உ, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு, 1981 (ஆ. இ)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு ''தமிழ்நாடு 1981 (சட்டமன்றப்பேரவை சட்டமுன் வடிவு எண். 74/1981)'' ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

ஈ. ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, (தமிழ்நாடு 1981.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 74/1981)'' ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். ஏற்கனவே, ஒன்றியங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கி, அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகளெல்லாம் இவர்களுக்கும் கிடைக்கும் என்ற முறையில் அறிவிக்கப்பட்டு அது இப்பொழுது சட்ட ரூபத்தில் கொண்டு வந்து அதன் காரணமாக ஆசிரியர்கள் பயனடைவார்கள் என்ற முறையிலே இதை வரவேற்கிறோம்.

இந்தச் சட்டத்தைப் பராமரித்து அமல் நடத்த, இந்த ஆசிரியர்களைக் கண்காணிக்க பல்வேறு இடங்களில் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், குறிப்பாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு சார்பு நிலை அதிகாரி என்ற வகயில் 376 இடங்களிலும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அவர்களுக்கு இடம் ஒதுக்கும் ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோக ஃபர்னிச்சர் கொடுக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. சிப்பந்திகளையும் இந்தப் பஞ்சாயத்து யூனியனி

*1981 ம்ஆண்டு மாதம் மாதம் 26—தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.